வானூர் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பொன்னுரங்கம் அவரது தந்தை சின்னதம்பி அவர்களின் மறைவிற்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றிய செயலாளர்கள் மைதிலி ராஜேந்திரன், வே.கணேசன், பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் அன்புமணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.தி.ஜெ.ராஜவேல், கலைவாணன், தேவேந்திரன், ஒன்றிய அமைப்பாளர்கள் ராஜவேல், பூக்கடை சுந்தர், பிரவின், ராஜசேகர் நிர்மல் ராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

வேளாண்மை – உழவர்நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று காலை கிரீன்வேஸ் சாலையில் உள்ள தனது செண்பகம் இல்லத்தில் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

‘திராவிட மாடல்’ அரசு மீது வெறுப்பைக் கக்கும்

நாக்பூரின் ஏஜெண்டாகச் செயல்படுகிறார் ஆளுநர் ரவி!

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு காட்டமான பதிலடி!

சென்னை, ஆக. 16 -

‘திராவிட மாடல்’ அரசு மீது வெளிப்படையாக வெறுப்பைக் கக்கும் நாக்பூரின் ஏஜெண்டாக செயல்படுகிறார் ஆளுநர் ரவி” என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளருமான அமைச்சர் கே.என்.நேரு அறிக்கையில் கூறியுள்ளார்.

இது குறித்து அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

“தமிழ்நாட்டில் இளைஞர்கள் மத்தியில் ரசாயனப் போதைப்பொருள்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. பெண்கள், பெண் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரிப்பது கவலை அளிக்கிறது” எனக் கிண்டி கமலாலயத்தில் (!) இருந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

தென்னை மரத்தில் தேள் கொட்டியதற்குப் பனை மரத்தில் நெறிக் கட்டும் என்ற பழமொழியைப் போல ‘தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் ஆளுநர் எதுவும் செய்யவில்லை’ எனச் சொல்லி நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் கையால் பட்டம் பெற மறுத்து அவமானத்தைச் சந்தித்த ஆளுநர் ரவிக்கு 24 மணி நேரம் கழித்து நெரி கட்டியிருப்பதைத் தான் அவருடைய அறிக்கை வெளிக்காட்டுகிறது.

விரக்தியில் வெம்பி ஆளுநர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்!

இன்னொரு பக்கம் சுதந்திர தினத்திற்காகத் தேநீர் விருந்துக்கு அரசியல் கட்சிகளுக்கு ஆளுநர் ரவி அழைப்பு விடுத்ததை தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் புறக்கணித்திருக்கின்றன. இப்படி விரக்தியில் வெம்பி அறிக்கை விட்டிருக்கிறார் ஆளுநர். அதில் சொல்லப்பட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு ஏற்கெனவே ஆதாரத்தோடு பதில் அளிக்கப்பட்டுவிட்டது.

நாட்டின் சுதந்திர தினத்திற்கு விடுத்துள்ள செய்தியில் கூட நாகரிகம் இல்லாமல் ஆதாரமில்லாமல், மனம் போன போக்கில் அவதூறுகளை அள்ளி வீசியிருக்கிறார். ஒன்றியத்தை ஆளும் பாசிச பா.ஜ.க. தங்களுக்கு

வேண்டாத மாநிலங்களுக்கு ஆளுநர் என்னும் நச்சுப் பாம்பை அனுப்பி குடைச்சல் கொடுத்து வருகிறது. அப்படித் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைத்த ஆர்.எஸ்.எஸ் சின் கைக்கூலி ஆர்.என்.ரவி ஜனநாயக முறையில் மக்களின் பெருவாரியான ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறார். அத்தனை நெருக்கடிகளையும் உச்ச நீதிமன்றம் வரை சென்று நாம் நசுக்கினோம்.

அசிங்கமான அரசியல் செய்கிறார் ஆளுநர்!

அமைச்சர்கள் நியமனம், மசோதாக்கள் நிறுத்தி வைப்பு, ஆளுநர் உரையில் ஆரியத் திணிப்பு என எதிலாவது ஆளுநர் ரவி வெற்றி பெற்றிருக்கிறாரா? அவமானங்களை மட்டுமல்ல, தொடர் தோல்விகளையும் தாங்கிக் கொள்வது அரிய கலை.

இந்திய அளவில் பாசிசச் சக்திகளிடம் கட்டுண்டு கிடந்த ஜனநாயகத்தை மீட்டெடுத்தோம். பல் பிடுங்கப்பட்ட பாம்பாக மாறி ஆள் இருக்கும் இடமே தெரியாத அளவுக்கு மாறிவிட்ட ஆளுநர், சுதந்திர தின உரை என்ற பெயரில் அவதூறுகளை வீசி தன்னையே அழுக்காக்கிக் கொண்டார். ஆளுநரின் அறிக்கையில் ’பாஜகவுக்கு வாக்களியுங்கள்’ என்ற ஒற்றை வார்த்தை மட்டும்தான் இல்லை. மற்றபடி ஆதாரங்கள் இல்லாமல் அவதூறுகளை வீசும் அசிங்கமான அரசியல்தான் செய்திருக்கிறார்.

அமித்ஷாவே சிரிப்பார்!

ஒன்றிய அரசு லட்சக்கணக்கான கோடிகளை தமிழ்நாட்டுக்கு நிதிப் பகிர்வு வழங்கியது எனச் சொல்லியிருக்கிறார். இந்த ஆண்டு மோடி அரசு சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் ’தமிழ் நாடு’ என்ற பெயரே இல்லை என்பது கூட தெரியாமலா ஓர் ஆளுநர் இருப்பார்? இந்த போட்டோஷாப் வேலைகள் எல்லாம் தமிழ்நாட்டில் எடுபடாது என்று தெரிந்தும் அறிக்கை வெளியிட்டுத் திருப்திப் பட்டுக் கொள்வது எல்லாம் ஆகச் சிறந்த நகைச்சுவை. ஆளுநரின் அறிக்கையைப் படித்தால் அமித் ஷாவே சிரிப்பார்

தமிழ்நாடு பற்றிய தேசியப் புள்ளி விவரங்கள் கல்வியிலும், சமூகபாலின வேறுபாடுகளைக் களையும் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும், ஆற்றல் மிக்க இளையோரை உருவாக்குவதிலும் முன்னோடியாகத் திகழ்ந்து, நாட்டின் பொருளாதாரத்தில் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகின்றது. அண்மையில் ஒன்றிய அரசு புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்ட விவரங்களின்படியே பத்தாண்டுக்குப் பிறகு, தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சி விகிதம் 11.19 சதவிகிதமாக இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டியுள்ளது.

இந்நிலையில்தான் ஆளுநர் பொய்களையும் அவதூறுகளையும் வாரி இறைத்திருக்கிறார். ஆளுநரின் பேச்சுக்குப் பதில் கூறும் முகமாக ஆதாரங்களை முன்வைத்துப் பதிலளிப்பது, பயனற்றது. ஏனென்றால், ஆளுநர் ஆர்.என். ரவி தமிழ்நாட்டின் ஆளுநராகச் செயல்படாமல், திராவிட மாடல் மீது வெளிப்படையாக வெறுப்பைக் கக்கும் நாக்பூரின் ஏஜெண்டாகச் செயல்பட்டு வருகின்றார்.

பல்லார் முனியப் பயனில சொல்லுவான் எல்லாரும் எள்ளப் படும்.

என்கிற வள்ளுவரின் குறளுக்கு உதாரணமாக விளங்குகின்றார். “பலர் வெறுக்கும்படியான பயனற்ற சொற்களைப் பேசுபவன், எல்லாராலும் இகழப்படுவான்” என்பதுதான் அந்த குறளின் பொருள்.

இதனைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அறிந்தே உள்ளனர். அதனால் தமிழ்நாட்டு மக்கள் எவரும் ஆளுநருக்குரிய மதிப்பை அவருக்கு அளிப்பதில்லை.

கமலாலயத்திற்குப் போட்டியாக ராஜ்பவனை மாற்ற முயற்சிக்கிறார்!

நாட்டிலேயே தனிநபர் வருமானத்தில் முதலிடத்தில் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு. பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக இருப்பதும் தமிழ்நாடுதான். இந்தியாவிலேயே அதிகப் பெண் தொழில் முனைவோர்களை உருவாக்கியதும் அதிக ஸ்டார்ட் அப் எண்ணிக்கைகளும் உருவாக்கியது தமிழ்நாடுதான்.

கடந்தாண்டு புயல் வெள்ளப் பாதிப்புகளுக்காக தமிழ்நாடு அரசு 37,907 கோடி ரூபாய் கேட்டபோது வெறும் 276 கோடி ரூபாயை மட்டுமே வழங்கி வஞ்சித்தது ஒன்றிய அரசு.

பள்ளிக் கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய நிதியையும் இன்னும் வழங்காமல் இழுத்தடித்து வருகிறது. மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் நிதி என்று ஒன்றிய கல்வி அமைச்சர் அறிவித்தது ஜனநாயகப் படுகொலை இல்லையா? குலக்கல்வியை ஊக்குவிக்கும் விஸ்வகர்மா திட்டத்தைச் செயல்படுத்தத் துடிக்கும் ஒன்றிய அரசின் கையாலாகாத கையாள் ரவிக்கு தமிழ்நாட்டுக் கல்வியின் தரம் பற்றி என்ன தெரியும்? தமிழ்நாட்டு அடையாளத்தை அழிக்கும் வகையில் கீழடி அகழ்வாராய்வு அறிக்கையை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது ஒன்றிய அரசு.

ராஜ்பவனை ஆளுநர் ரவி அரசியல் பவனாக மாற்றி, கரை வேட்டிக் கட்டிய அரசியல்வாதி போலச் செயல்படுகிறார். கமலாலயத்திற்குப் போட்டியாக ராஜ்பவனை மாற்ற முயல்கிறார். ஆளுநர் அந்தந்த மாநில அரசுகளுக்கு நண்பராக இருக்க வேண்டியவர். ஆனால், எதிரிக் கட்சியாக நின்று, வசைமாரி பொழிந்து கொண்டிருக்கிறார்.

ரம்மி நிறுவனங்களுக்கு பிராண்ட் அம்பாசிடராகவும் ‘நீட்’ பயிற்சி மையங்களுக்கும் பி.ஆர்.ஓ.வாகவும் செயல்படுகிறவரிடம் என்ன நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? உச்ச நீதிமன்றம் வரையில் போய் கரியைப் பூசிக் கொண்ட பிறகும் ஒருவர் திருந்தவில்லை.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

இணையத்தில் கழகத்தின் முகங்களில் ஒருவராக அறியப்பட்ட

அன்புத் தம்பி காளிமுத்துவின் மறைவு வேதனை அளிக்கிறது!

வலைதளப் பதிவில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

சென்னை, ஆக. 16 -

இணையத்தில் கழகக் கருத்துக்களை துடிப்புடன் எடுத்தியம்பி வந்த கழகத் தோழர் காளிமுத்து மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் விடுத்த இரங்கல் செய்தியில், “இணையத்தில் கழகத்தின் முகங்களில் ஒருவராக அறியப்பட்ட அன்புத் தம்பி - துடிப்புமிக்க இளம் உடன் பிறப்பு காளிமுத்து மறைந்த செய்தி வேதனையளிக்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

கட்சியில் எந்தப் பொறுப்பிலும் இல்லாவிட்டாலும், தனது கருப்பு சிவப்பு உணர்வால், இணையத்தில் கழகத்தின் முகங்களில் ஒருவராக அறியப்பட்டவரும், கழகமே தனது அடையாளம் எனச் செயல்பட்டவருமான அன்புத்தம்பி காளிமுத்து (@Mark2Kali) அவர்கள் மறைந்த செய்தி என்னை மிகுந்த அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியுள்ளது.

துடிப்புமிக்க இளம் உடன்பிறப்பான காளிமுத்து அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், நம் கழகக் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர், ஆக.16-

மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விருதுநகர் வடக்கு மாவட்டக் கழக கூட்டம் நாளை (16.08.2025 -சனிக் கிழமை) காலை 10.00 மணியளவில், மல்லாங்கிணர், இராஜாமணி திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் வி.தங்கராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள்/நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்/துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள், கிளைக்கழகச் செயலாளர்கள்/பிரதிநிதி கள் மற்றும் கழக முன்னோடிகள் உள்ளட்ட கழகத்தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை சம் மந்தமாக

2. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாநகராட்சி சார்பில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தையொட்டி மாநகரச் செயலாளர் ப.கார்த்திக் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மேயர் சுஜாதா அனந்த குமார் ஆகியோர் முதியோர் – மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் இல்லத்திற்கே சென்று ரேசன் பொருள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தனர்.

விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் தெற்கு ஒன்றியம், சேந்தனூர் ஊராட்சியில் புதிய மின்மாற்றியை மக்கள் பயன்பாட்டிற்கு இயக்கி வைத்தார். உடன் கோலியனூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் தே.முருகவேல், கோலியனூர் ஒன்றிய குழுப் பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாவட்ட விவசாய அணி தலைவர் ஆர்.குப்புசாமி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் இரா.கேசவன், அரசு அதிகாரிகள், ஒன்றிய துணைச் செயலாளர் பாலாஜி, ஊராட்சிமன்ற தலைவர் சுதா பாபுஜி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் நன்னாடு முத்து, கிளைச் செயலாளர்கள் பாபுஜி, சக்திவேல், தினேஷ், புகழேந்தி, கிரி, தங்கையன், பிரபாகரன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

விளாத்திகுளம் ஸ்ரீ சுப்பிரமணியசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாமை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்து பார்வையிட்டு வருவாய்துறை சார்பில் பயனாளிகளுக்கு முதல் பட்டதாரிக்கான சான்றிதழ், விதவைச் சான்றிதழ் மற்றும் பேரூராட்சி சார்பில் சொத்து வரி பெயர் மாற்றுதல் ஆணை மருத்துவத்துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூராட்சி மன்றத் தலைவர் சூர்யா அய்யன்ராஜ், ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல் உள்ளிட்ட பொதுமக்கள், துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.